6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

100. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்புக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 2–3–2018 ஆம் நாளிட்ட எண் தமிஒஆ/வவி/7–39–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

101. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்புக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 2–3–2018 ஆம் நாளிட்ட எண் தமிஒஆ/பவி/8–24– ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

237. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

238. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2018. (தமிழ்)

239. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

240. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2018. (தமிழ்)

இணைப்பு I

(76-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2018-2019

முகவுரை

1. கூட்டுறவில் ஜனநாயகக் கோட்பாடு என்பது தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்வு மேம்பட "கூட்டுறவு இயக்கத்தை" நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1904 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில், திரூரில் முதல் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவுத் துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

2. கடன் மற்றும் பிற இடுபொருட்களை வழங்கி மாநிலத்தின் வேளாண் வளர்ச்சியில் மிகப்பெரிய தாக்கத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டு வந்துள்ளன. இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி, வேளாண் விளைபொருட்களுக்கான உரிய விலை விவசாயிகளுக்கு கிடைத்திட, கூட்டுறவுத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவுகள், உறுப்பினர்களின் வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொது விநியோகத்திட்டத்தின்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்தல் உட்பட நுகர்வோர் தேவைகளையும் நிறைவு செய்து, பெரும் பணியாற்றி வருகின்றன.

3. மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் பயிர்க் கடன்கள் வழங்கப்படுகிறது. உரிய காலத்தில் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கான வட்டித்தொகையை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. பயிர்க்காப்பீடு வழங்குவதுடன், கறவை மாட்டுக் கடன், டிராக்டர் கடன், சொட்டு நீர்ப்பாசனக் கடன் போன்ற வேளாண் முதலீட்டுக் கடன்களும் கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன.